## முப்படைத் தளபதிகளுக்கு தீவிர பாதுகாப்பு!

(கொழும்பு)

ஜனாதிபதியின் பாதுகாப்பை விட முப்படைத் தளபதிகளுக்கும் தீவிர பாதுகாப்பு வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. படைத் தளபதிகளினது வாசஸ் தலங்கள் அமைந்துள்ள பகுதிகளில் எவருமே நடமாட முடியாது. வாகனங்களில் செல்லவும் முடியாது.

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 17 இதழ் 348
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 30-1-1994

## வாணிபம் - தொழில் செய்வோர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தில் வாணிபம்/ தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோர் கீழ்க்காணும் ஒழுங்கு முறைகளைக் கருத்திற் கொள்ளுமாறு மீண்டும் ஒரு முறை விடுதலைப் புலிகள் நிதி...

(4-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் புலேந்திரன் தமிழ்க் குழுக்கள் முரண்பாடு

(கொழும்பு)

கல்வி ராஜாங்க அமைச்சர் திருமதி ராஜமனோகரி புலேந்திரனுக்கும் தமிழ் குழுக்களுக்கும் இடையில் பெரும் கருத்து மோதல்கள் ஏற்பட்டுவருகிறதாம்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ★ உள்நாட்டுப் போருக்காக

# இலங்கைக்கு இந்தியப்படை மீண்டும்வருவது அவசியமில்லை

## - காமினி கூறுகிறார் -

(கொழும்பு)

இந்தியப்படை மீண்டும் இலங்கைக்கு வருவது அவசியமற்றது. இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு பல வழிகள் உண்டு. இந்த நேரத்தில் இலங்கைக்கு மீண்டும் இந்தியப்படை வரவேண்டுமா? அல்லது வேண்டாமா? என்ற கேள்விக்கு அது அவசியமில்லை என்பதே எனது பதில் என திரு. காமினி திஸநாயக்கா 'பி. பி. ஸி. சந்தேசிய' வுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

அப்பேட்டியில் அவர் மேலும் கூறுகையில்:

முன்பு இந்தியப்படை இங்கு இலங்கை அரசாங்கம் அழைத்ததன் பேரில்தான் வந்தது. விவகாரமான நேரத்தில் இலங்கை ஜனாதிபதி ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்தியப்படையை அழைக்கலாம் ஆனால் இந்திய உதவியோ அல்லது வெளிநாட்டு உதவியையோ எதிர்பார்த்தால் இந்தப்பிரச்சினை தீர்வதற்கு அதிக காலம் செல்லும். அதற்கு முன்பு சமாதான மூலம் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வைக் காணவேண்டும் ஆனால் யுத்தத்தின் மூலம் இந்தப் பிரச்சினையை தீர்க்கலாம். என்று இருக்கும் நேரத்தில் இது விவாதத்துக்குரியதல்ல.

இலங்கை இந்திய ஒப்பந்தத்துக்கு மூல காரணம் நான் தான் என்று இலங்கை மக்கள் அனைவருக்கும் தெரியும் என்னைப் பொறுத்தவரை இந்தியாவுடன் சுமுகமான உறவை வைத்துக்கொள்ள வேண்டும். இந்திய உபகண்டத்தில் இந்தியாவோடு ...

(4ம் பக்கம் பார்க்க)

## காமினி இணைப்பு ஐ. தே. க. பிளவு?

(கொழும்பு)

காமினி திசநாயக்காவை ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்த்துக்கொண்டதையிட்டு ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பெரும் பிளவுகள் வரலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே அமைச்சர் சிறிசேன கூரேயும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் பலத்த எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். இதேவேளை ஜனாதிபதியுடன் சிலவேளை ...

(4ம் பக்கம் பார்க்க)

## கிழக்கே பிரசாரத்திற்கு ரணில் செல்கிறார்

(மட்டக்களப்பு)

கிழக்கில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் ஐ. தே. க. சார்பில் பிரசாரம் செய்ய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் மட்டக்களப்பு செல்லவுள்ளார்.

இங்கு இவர் இரு நாட்கள் தங்கியிருந்து தீவிர பிரசாரத்தில் ஈடுபடுவார் என கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

(4-ம் பக்கம் பார்க்க)

## தேர்தலின் பின்பே வடக்கில் தாக்குதல்?

(கொழும்பு)

கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்கள் முடிவடைந்த பின்னரே வடக்கில் பாரிய தாக்குதல்கள் ஆரம்பமாகும் என இராணுவ வட்டாரம் கள் கூறியுள்ளன.

வடக்கே பாரிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் அதன் விளைவுகள் தேர்தல் முடிவுகளையும் பாதிக்கும் என்பதால் தேர்தல் முடிந்த பின்னரே தாக்குதல் ...

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழர் என்ற காரணத்தால் துன்புறுத்தப்படுகிறார்கள்

(கொழும்பு)

தமிழர் என்ற காரணத்தினால் பௌத்த அரசினால் தமிழர்கள் அவர்களைத் தொடர்ந்தும் துன்புறுத்தி வருகின்றனர் என "ஹிரு" என்ற சிங்கள பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது.

1983-ம் ஆண்டிலிருந்து 1993-ம் ஆண்டுவரையிலான காலப்பகுதியில் பெருமளவு தமிழ்மக்களை ஸ்ரீலங்கா படையினரின் ஷெல் மற்றும் குண்டு வீச்சுத் தாக்குதல்களினால் ...

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் பாதுகாப்புக்கு புலிகளால் அச்சுறுத்தல்!

### பிரதமர் ராவ் எச்சரிக்கை

(புதுடில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூலம் இந்தியாவின் பாதுகாப்புக்கும், ஒருமைப்பாட்டுக்கும் அபாயம் சூழ்ந்துள்ளதாக இந்தியப்பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

ஒரு புறம் விடுதலைப்புலிகள் இயக்கமும், இன்னொரு புறம் பாகிஸ்தானும் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுத்து வருவதாகவும் குறிப்பிட்ட திரு நரசிம்மராவ் இந்த சக்திகளிடமிருந்து நாட் ...

(4ம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரிப் பகுதியில் புக்காரா நோட்டம்

(சாவகச்சேரி)

புக்காரா குண்டுவீச்சு விமானம் ஒன்று, சாவகச்சேரி நகரை அண்டிய பகுதியில் திடீரென சுற்றி வட்டமிட்டு, நோட்டமிட்டுச் சென்றுள்ளது. நேற்று நண்பகல் 12-05 மணியளவில் இவ்வாறு நோட்டமிட்ட புக்காரா சில நிமிடங்களில் பலாலிப் பக்கம் சென்று மறைந்தது.

(4-ம் பக்கம் பார்க்க)

## சிங்களப் பிரமுகர்கள் அரசுமீது கண்டனம்

(பாரிஸ்)

தமது பதவிகளைத் தக்க வைத்துக்கொள்வதற்காக அப்பாவிச் சிங்கள இளைஞர்களை சிங்களத் தலைவர்கள் பலிக்கடாக்களாக்கியுள்ளனரென்று பிரான்ஸில் வாழும் பல சிங்களப் பிரமுகர்கள் அரசு மீது கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஜே. ஆர். ஜெயவர்த்தன, ஆர் பிரேமதாச, டீ. பி. விஜயதுங்கா ஆகியோர் மீது இனம் கொண்டுள்ள இக்கவப் ...

(4ம் பக்கம் பார்க்க)

## 10,083 ராணுவத்தினரை தேடி நாடு முழுவதிலும் தீவிர வேட்டை

(கொழும்பு)

வடக்கு—கிழக்கில் யுத்தம் ஆரம்பித்த காலத்திலிருந்து இதுவரை 10,083 இராணுவ வீரர்கள் இராணுவத்திலிருந்து தப்பிச்சென்றுள்ளார்கள். இவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணி தற்போது முடுக்கிவிடப்பட்டுள்ளது.

இவர்களைத் தேடி கிராமம் கிராமமாகச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தி இவர்களைக் கண்டுபிடிக்கும் பணியில் ...

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சித்திரம் (ஆண்டு 11) ஆங்கிலோயோகி! "யசோ" எங்கும் கிடைக்கும். சி-755

சங்கீதம் (வினாவிடை) ஆக்கம் ஸ்ரீமதி தாட்சாயணி சிவானந்தசர்மா விலை 24/- எங்கும் கிடைக்கும். (சி-756)

A 50 கேம்பிரிச் கார் நல்ல நிலைமையிலும்; மற்றும் A 50 கார் பழைய உதிரிப் பாகங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ரமு, V. C. வடக்குப்பக்கம்' ஆனைக்கோட்டை. (சி-761)

### பழங்கள் தேவை

உங்கள் வீட்டுத் தோட்டங்களில் உள்ள பசும் பழங்களையும், பப்பாசிப் பழங்களையும் நாம் கொள்வனவு செய்கின்றோம். Taste Line Industries (P V T Ltd. 14 Seeiner Lane Jaffna. (A-3743)

### பொது அறிவுச் சஞ்சிகை

"தாரணி" (100 தகவல் அடங்கிய பொது அறிவுச் சஞ்சிகை) வாசகர்கள் உடன் தகவல்கள் அனுப்பவும். விலை ரூபா 6/- ஆசிரியர், தாரணி, 55, யமுனா வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (ஏ-3782)

### மீண்டும் ஆரம்பம்

"ராஜு போட்டோ ரெலிஸ்" மீண்டும் திருத்த வேலைகளை ஆரம்பித்துள்ளது. கமெரா, பிளாஷ்கண், பைனாகுலர்ஸ், வீடியோ கமரா போன்றவை சிறந்த முறையில் பழமைபோல் திருத்திக் கொடுக்கப்படும். N. S. நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி (மேல்மாடி கன்னாதிட்டி சந்திக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-751)

### வாருங்கள் திருத்திப்பாருங்கள்

சகல மணிக்கூடுகள், ரேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். உதிரிப் பாகங்களும்கூட நல்ல நிலையில் உள்ள மணிக்கூடுகள் வாங்கப்படும். டிலக்ஸ் வாச் அன் றேடியோ சென்டர், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (ஆனந்தக் கூல்பார் அருகில்) இல: கண்டி வீதி, சாவகச்சேரி. (ஏ-3795)

### MATHS

புலமைப் பரிசில் வகுப்பிலிருந்து (O/L) வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 27 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மாணவர்களில் Distinction பெறுபேறுடைமைக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டுக்குளி. (சி- 757)

### மனனப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை நகர் மாணவர்களின் கல்வி அறிவை ஊக்குவிக்கும் நோக்குடன் ஔவையார் அருளிச் செய்த கொன்றைவேந்தன் சிறுவர் மனனப்போட்டி ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு ஐந்து மாணவர்களுக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நாவலர் ம. வி.யில் நடாத்தப்படும்.

## 31-ம் நாள் ஆத்மசாந்தி பிரார்த்தனை




### திருமதி
### விக்கினேஸ்வரி திருச்செல்வம்

திரு. திருச்செல்வம் (லண்டன்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற திரு. க. வைரமுத்து அவர்கள், (முன்னாள் உப - அதிபர் வைத்தீஸ்வரா கல்லூரி) திருமதி நாகம்மா வைரமுத்து அவர்கள், ஆசிரியையின் அன்பு மகளும், திரு. சம்புநாதன் அவர்களின் அன்புச் சகோதரியும் ஆகிய திருமதி விக்கினேஸ்வரி திருச்செல்வம் அவர்களின் ஆத்ம சாந்திக்கையும் பிரார்த்திக்கிறோம்.

க. கணேசலிங்கம்,
குடும்பத்தினர்,
32, பிறவுண் வீதி. யாழ்ப்பாணம்.
(ஏ-3793)

## முதலாம் ஆண்டு நினைவு தினம்



ஆமரர்
### செல்லையா பொன்னுத்துரை
(கார்ண்டம் சாஸ்திரியார்)

**தோற்றம்:** 13-01 1904 **மறைவு:** 09-03-1993

**திதி: 30-01-1994**

அன்பின் உருவாய் பண்பின் சிகரமாய்
பாசத்தின் பிறப்பிடமாய் இல்லையென்று
வருவோருக்கு வாரி வழங்கும் வள்ளலாய்
காண்டம் வாசிப்பதிலே தன்னிகரற்றவராய்
தலைவனாய் ஆயிரம் பிறை கண்டு
அவனியில் வாழ்ந்த அன்புத் தெய்வத்தின்
ஆத்ம சாந்தி அடைய ஆண்டவனைப்
பிரார்த்திக்கின்றோம்

பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நீதிராசா வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (ஏ-3794)

## இன்று

(யாழ்ப்பாணம்)

சுண்டுக்குழி சன சமூக நிலையத்தின் விசேட பொதுக் கூட்டம் நிலைய உபதலைவர் திரு எஸ் அன்ரன் தலைமையில் இன்று இரவு 7மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறுமென செயலாளர் திரு. அ. தேவராசா தெரிவித்தார்
(வி)

0 0

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊர்காவற்றுறைப் பிரிவின் விசேட தொண்டர்கள் கூட்டம் இன்று 30ம் திகதி பிற்பகல் 2 மணிக்கு பிரிவுப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

0 0

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தாரால் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் 'யோகாசனச் செய்முறையும் விளக்கமும்' என்ற விடயம் பற்றிய கருத்தரங்கு இன்று 30ம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு நடைபெறும்.

(உடுவில்)

சோலைக்கலட்டி சைவத் தமிழ்க் கலவன் பாடசாலையை மீண்டும் இயங்க வைப்பதற்கான ஆலோசனைக் கூட்டம், சண்டிலிப்பாய் மகா வித்தியாலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3-00 மணிக்கு நடைபெறவுள்ளது. -190

9 0

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய மாணவர்களுக்கு இடையே நீச்சல் போட்டி ஒன்று இன்று 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7-00 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி ம. அன்னலிங்கம் தலைமையில் இடம்பெறும். -154

0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். வேலாயுதம் மத்திய மகா வித்தியாலய அதிபர் மு. இராமலிங்கத்தின் மணிவிழா இன்று 30ம் திகதி காலை 8-30 மணிக்கு கலாநிதி சு. மோகனதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. -ம

## வீட்டுக்கிருத்தியமும் நன்றி நவிலலும்



### திருமதி
### இரத்தினம் மயில்வாகனம்

**தெய்வம் அன்னையாக:** 11-06-1930 **அன்னை தெய்வமாக:** 31-12-1993

"தாயன்புக்கு ஈடாக உலகில் எதுவுமே இல்லை"

எந்த ஒன்றும் வேண்டாம் எமக்கு அம்மா நான் வேண்டும் என்று அடம்பிடித்து அழுவோம் அம்மா எங்கிருந்தாலும் ஓடிவந்து எங்களைக் கட்டி அணைத்து ஆசைமுத்தம் கொடுத்து எம்மை தேற்றிய நாட்களை எண்ணிப் பார்க்கிறோம். முடியவில்லையே; இன்னும் எமது மனம் ஆறவில்லையே அம்மா வாய்விட்டு கதறி அழுகிறோம் மூலைக்குமூலை புரண்டு துடிக்கின்றோம் நீங்கள் வந்து ஆறுதல்சொல்லவில்லை, எம்மை தேற்றவும் இல்லை இந்நினைவு நாளில் எங்களுடன் எங்கள் அம்மாவின் உயிர்மூச்சு கலக்க வேண்டும் என்று உங்களையே வேண்டுகிறோம் அம்மா!

- மரணச்சடங்கில் கலந்துகொண்டு மலரஞ்சலியும் சாந்தி ஆறுதல் கூறி, அனுதாபம் தெரிவித்தும், மற்றும் பல்வேறு வகையிலும் உதவிகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகள்,

உங்கள் நினைவாகவே உருகும்
தாய், கணவன், பிள்ளைகள்,
சகோதரர், சகோதரி, மைத்துனர்மார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், பெருமக்கள்,
மற்றும் உற்றார், நண்பர்கள்.

"சரஸ்வதி வாசா",
சங்குவேலி தெற்கு, மானிப்பாய். (எ-3796)

**மணிவாக்கு**

உலகம் தலைகீழாக இருக்கும்போது, உண்மை பேசினால்கூட அது ஒரு அதிசய செய்தியாகிவிடும்.
— பாஸ்கல்

# எம். பி.க்கள் பாவனைக்கென 40 'பஜ்ரோ' ஜீப்கள் தருவிப்பு!

## ஒவ்வொன்றும் 50 லட்சம் ரூபா பெறுமதி!!

(கொழும்பு)

நாடாளுமன்ற எம்.பிக்களின் பாவனைக்கென 40 சொகுசு ரக மிட்சுபிஷி பஜ்ரோ ஜீப்வண்டிகள் தருவிக்கப்பட்டுள்ளன. இந்த வாகனங்கள் அனைத்தும் 'டேர்போ' சக்தி கொண்ட என்ஜின்கள் மூலம் இயங்குமென்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான பணத்தை திறைசேரி இதுவரை வழங்காத காரணத்தால் இந்த 40 ஜீப்வண்டிகளும் கொழும்புத்துறைமுகத்தில் தேங்கிக்கிடப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஜீப்வண்டியும் சுமார் 50 லட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதி வாய்ந்ததாகும்.

ஒவ்வொரு ஜீப்வண்டிக்கும் எம். பி. ஒருவர் சுங்கவரியாக 2500 ரூபாவை மாத்திரமே செலுத்த வேண்டும். ஆனால் சாதாரணபிரஜை ஒருவர் இத்தகைய ஜீப்வண்டி ஒன்றை இறக்குமதி செய்தால் 22 லட்சம் ரூபாவை சுங்கவரியாக செலுத்த வேண்டியிருக்கும்.

இதேவேளையில் மேலும் ஒருகோடியே 16 லட்சத்து 28 ஆயிரம் ரூபாவை அரசாங்கம் சுங்கத்திணைக்களத்துக்கு இந்த வாகனங்களுக்கென வரியாக செலுத்த வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திறைசேரி நிதி ஒதுக்கியவுடன் இந்த வாகனங்களுக்கான பெறுமதி செலுத்தப்படும் என்ற நிபந்தனையின் கீழ் இந்த வாகனங்களை வழங்குமாறு அரசாங்க விநியோகப் பகுதிசுங்கத்திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.
(இ)

## 6,000 பீப்பா மண்ணெண்ணெ 'மாகோ'வில் வருகிறது

(கொழும்பு)

ஆறாயிரம் பீப்பா மண்ணெண்ணெ ஏற்றிக்கொண்டு மாகோ கப்பல் அடுத்த மாதம் 3ம் திகதி பருத்தித்துறை துறைமுகத்தை சென்றடையுமென அரசு நேற்று முன்தினம் அறிவித்தது.

இக்கப்பலில் மலேரியா நோயைத்தடுக்கும் மருந்துகள் அடங்கிய 30 பெட்டிகளும் வேறு மருந்து வகைகளும் அனுப்பப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
-வி

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தரின் 132வது பிறந்தநாள் திதி பூசை பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரம மண்டபத்தில் அடுத்த மாதம் 2ம் திகதி காலை 5-30 மணிக்கு மங்கள ஆராத்தியுடன் ஆரம்பமாகவுள்ளது. 4ம் திகதி சுவாமி விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகள் கருத்தரங்கு காலை 7 மணிக்கு இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
-ம

## சித்திரபாட தேர்வு

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை நுண்கலை மன்றம் நடத்தும் சித்திர பாடத் தேர்வுகள் 1994 பெப்ரவரி மாதம் 12, 13, 19, 20 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளன. தரம் 1, 2, 3 இற்கான தேர்வுகள் 19, 20ம் திகதிகளிலும், தரம் 4, 5 இற்கான தேர்வுகள் 12, 13, 19, 20-ம் திகதிகளிலும் நடைபெறும்.
(இ)

## நமது நோக்கு

### காமினியார் கருத்து!

"சிறுபான்மை மக்களின் துன்ப துயரங்களை முடிவுக்குக் கொண்டு வருவதன்மூலமே நாட்டில் நீண்ட நாட்களாக நிலவி வரும் இனப்பிரச்னைக்குத் தீர்வு காண முடியும்!" என 'இந்து' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் காமினி திசநாயக்கா கருத்துத் தெரிவித்துள்ளார்.

அது மாத்திரமல்ல, சிறுபான்மை இன மக்களின் உரிமைகளைக் கடந்தகால அரசுகள் வழங்கத் தவறியதன் காரணமாகவே விடுதலைப் புலிகள் இன்று போராட்டத்தில் குதித்துள்ளார்கள் என்பதையும் அவர் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

ஐ. தே. க.வில் மீண்டும் சேர்ந்துள்ள காமினி திசநாயக்காவின் இந்தப் பரபரப்பான கருத்து, கட்சிக்குள் சலசலப்பை ஏற்படுத்துவதோடு அரசியல்வாதிகள் அனைவரையுமே தமது கொள்கைகளை மீளாய்வு செய்ய உதவுமா?

இலங்கையில் இனப்பிரச்னை இல்லை, இருப்பது வெறும் பயங்கரவாதப் பிரச்னையே என்று அடித்துக் கூறிக் கொண்டிருக்கும் ஜனாதிபதி தமது நிலைப்பாட்டை மாற்றுவாரா?

தமிழர் பிரச்னை சிறுபான்மையோர் பிரச்னை என அவர் குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியுமா? இந்தக் காலகட்டத்தில் எனக் கேள்வி எழுப்புவதில் நியாயமுண்டல்லவா!

தமக்கென ஒரு நிலையான, பாதுகாப்பான அரசை, தாம் பெரும்பான்மையாக வாழும் பிரதேசத்தில் அமைக்க தமிழர்கள் போராட்டம் மாறியுள்ள நிலையே யதார்த்தமானது.

இதற்கான காரணத்தை காமினியாரின் கருத்து வெளிப்படுத்துகிறதல்லவா?

உரிமைகளைப் பெற்றிட போராட்டத்தை உரிய காலத்தில் அரசுகள் தீர்க்க முற்பட்டிருந்தால் இந்த நிலை தோன்றியிருக்குமா?

நடந்ததென்ன? நீதியான முறையில், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் கடந்த கால அரசுகள் நடந்தனவா?

அடக்குமுறைகளால், இராணுவ பலத்தால் நசித்துவிடலாம் என மனப்பான்மை குடிகொண்டவர்களே இது. இன்றும் கூட, காமினியார் கருத்து தென்னிலங்கை இனவாதிகளின் கண்களைத் திறக்குமா?

## இராசிபலன்

**30 - 1 - 1994**

ஞாயிற்றுக்கிழமை

**(தமிழுக்கு தை 17)**

திருதியை பி.ப. 3 01வரை. பூரம் மு.இ. 10-06 வரை. சித்தயோகம். அமிர்தம், இராகு காலம் 5-06 முதல் 6-36 வரை, சுபநேரம் காலை 9-36 முதல் 11-06 வரை.

மேடம்: ஆசைகள் நிறைவேறல். பண வரவு, தர்ம சிந்தனை.

இடபம்: காரிய தாமதம், மனக்கவலை, குழப்பம்.

மிதுனம்: இலாபம், பகை, நம்பிக்கையீனம், அலைச்சல்.

கடகம்: மனத்தைரியம், தொழில் சிறப்பு, புகழ்.

சிம்மம்: மனச்சங்கடம், தேக சௌக்கியமின்மை, பிதா கோபம்.

கன்னி: தொழில் வெற்றி, அதிக பிரயாசம், புகழ்.

துலாம்: கீழ்ப்படிதல், மனப் போராட்டம், தனிமைப்படல்.

விருச்சிகம்: மன மூலமான சந்தோசம், குடும்பப்பெருமை விவாகம்.

தனுசு: பெரியோர் மரியாதை, புதியமுயற்சி, சிறப்பு.

மகரம்: நிர்ப்பந்தம், சத்துரு பீடை, கடன் சுமை.

கும்பம்: மனைவிதுயர், வீண் பழி, விரோதம்.

மீனம்: அவருனபோக்கு, சுபச்செலவு, நண்பர் சகாயம்.

— ஜோஸ்யர்

## சமய பாடப் பரீட்சை முடிவு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை — பாவர் ஞானோதயசபையின் 47-வது ஆண்டை முன்னிட்டு நடாத்தப்பட்ட சமய பாடப் பரீட்சையில் விசேட சித்தி பெற்றவர்கள் விபரம்;

1-ம் வகுப்பு தி. அரவிந்தன். 2-ம் வகுப்பு தி. நேசகோபன், ச. கலைமதி, தி. ஊர்வசி, த. பவேந்திரன். 3-ம் வகுப்பு தி. தயந்தன், வி. பிரியா, தி. ஊர்வசி, ச. அரவிந்தன். 4-ம் வகுப்பு ச. துஷ்யதனுசா. 5-ம் வகுப்பு கி. தமிழ்ச்செல்வி, வி. தயாளன், ச. சுயேந்திரன், த. துஷ்யதர்சினி. 6-ம் வகுப்பு நா. சோமதி, க. ஜனனி. 7-ம் வகுப்பு ஆ. நந்தினி, பி. நிரஜா, 9-ம் வகுப்பு வி. அமிர்தினி, நா. சுகாதி.

## மூலவள நிலைய திறப்புவிழா

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கின் இரண்டாவது கணிதமூலவள நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. திருமதி நகுலேஸ்வரி நகுலராசா ஞாபகார்த்தமாக அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் இக்கணித மூலவள நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இம்மூலவள நிலையத் திறப்புவிழா அதிபர் எம். ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் நடைபெற்றது.
-52

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**வீரவேந்தன் வீரமுத்து தெய்வேந்திரம்பிள்ளை J. P.**

(ஓய்வு பெற்ற அதிபரும் சமாதான நீதிபதியும்)

தோற்றம்: 03-05-1916 மறைவு: 12-02-1990

**திதி: 30-01-1994**

எங்கள் அன்புத் தெய்வமே
பாசத்தின் பிறப்பிடமே
பண்பின் ஒளிச்சுடரே

நீங்கள் எங்களைப்பிரிந்து நான்கு ஆண்டுகள் கடந்திடினும் உங்கள் நினைவுச் சுடர் என்றும் எம் இதய விளக்குகளில் ஒளிர்விட்டுக் கொண்டே இருக்கும்.

உங்கள் பிரிவால் துயருறும்

மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தங்கசிவபதி,
வடக்குக்கிழக்கு,
சித்தன்கேணி.

(வி-753)


ஓம்
விராட் விஸ்வப்பிரம்மனே நம

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ஸ்ரீமுக வருடம் தைத்திங்கள் 20-ம் நாள் (02-02-1994) புதன்கிழமை காலை 9-36 மணிமுதல் 10-36 வரை வரும் கன்னி இலக்கின சுபமுகூர்த்த வேளையில்

| எமது கனிஷ்ட புத்திரன் | | எமது சிரேஷ்ட புத்திரி |
|---|---|---|
| திருநிறை செல்வன் | ★ | திருநிறை செல்வி |
| கணேசலிங்கம் (கணேஸ்) | ★ | லதா |
| (METAL WORK'S) | ★ | |
| அவர்களுக்கும் | ★ | அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் நிகழவிருக்கும் திருமண வைபவத்தில் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். அன்று மாலை 4 00 மணியளவில் மணமகள் இல்லத்தில் நடைபெறும் வரவேற்பு உபசாரத்திலும் பங்குகொள்ளுமாறு வேண்டுகிறோம்.

★ இருவீட்டார் அழைப்பு ★

லெட்சுமண ஆச்சாரி
கெங்காதரன் குடும்பத்தினர்
314, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

க. சுப்பிரமணியம் (இந்திரன்)
குடும்பத்தினர்
''கரேஸ் இல்லம்''
கோரதிவு வீதி, கச்சன்தோப்பு - நாவற்குழி.

தனிப்பட அழைக்கமுடியாமைக்கு மன்னிப்புக் கோருகிறோம்

